24.02.2026

O.S.No. **256/2023**

PW1- **கோபிநாத்– த/பெ. பாப்பையா**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன்என்றால் பரம்பரையாக விவசாயம் செய்து வருகிறேன்.

2. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் இடத்தில் வாராங்கால் அமைக்கக்கூடாது எனக் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. வழக்கு சொத்து என் அனுபவத்தில் இருப்பதற்கு என்னால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்து எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் அறக்கட்டளைக்கு ரசீது மூலம் பாத்தியப்பட்டது.

5. பிராது தபசில் சொத்தில் என்ன பயிர் செய்து வருகிறேன்என்றால் மாணவாரி பயிர்களான உளுந்து மற்றும் வெள்ளரிக்காய் ஆகியவை பயிர் செய்து வருகிறேன்.

6. யார் கண்காணிப்பில் விவசாயம் செய்யப்படுகிறது என்றால் என் நேரடி கண்காணிப்பில் விவசாயம் செய்யப்படுகிறது.

7. தபசில் சொத்து என் அனுபவத்தில் இல்லை என்றும் தபசில் சொத்தின் அமைப்பு காடு போன்ற பகுதியாக உள்ளது என்றும் விவசாயத்திற்கு ஏதுவான நிலமாக இல்லை என்றும் வழக்கிற்காக நான் விவசாய நிலம் என்று தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதிகள் வாறுகால் அமைப்பதால் எனக்கு என்ன இடையூறு என்றால் என் இடம் நிறைய பாதிக்கும். வாறுகால் என் இடத்தில் வரும்.

9. வாறுகால் என் இடத்தில் அமைக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்கு ஆணையர் நியமிக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

10. வாறுகால் என் இடத்தில் இருக்கின்றது என்பதை உறுதி செய்து கொள்ள நில அளவையரை வைத்து ஏதேனும் அளவீடு செய்தேனா என்றால் இல்லை.

11. பிரதிவாதிகள் முறையாக அளவீடு செய்து அரசு இடத்தில் தான் வாறுகால் அமைக்கின்றனர் என்றும் என் இடத்தில் எந்த வாறுகாலும் அமைக்காததால் என் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

12. பிராது சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண்.173 அதன் விஸ்தீரணம் 5.3/4 ஏர்ஸ்.

13. தபசில் சொத்து எந்த அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டது

என்றால் திருக்குற்றாலநாதர் சுவாமி அர்த்தஜாமம் கட்டளைக்கு பாத்தியப்பட்டது.

14. எங்கள் அறக்கட்டளை தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரசீது மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

15. வழக்கு நான் தாக்கல் செய்வதற்கு எனக்கு அறக்கட்டளை அதிகாரம் வழங்கியதற்கான ஆவணம் தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறாமலும் பிராது தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

16. அரசு நிதி மூலம் உள்ளூர் நிர்வாகம் சரியாக பஞ்சாயத்து மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மக்கள் நலனுக்காக அமைக்கப்படும் வாறுகாலை உள்ளூர் நிர்வாகத்தில் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக பொதுமக்கள் நலனுக்கு எதிராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

17. வாறுகாலானது 272 மீட்டர் அமைக்கப்பட்டும் 81 மீட்டர் மட்டுமே நிலுவையில் உள்ளது என்றும் பணி 80 சதவீதம் நிறைவேற்றப்பட்டது என்றால் எனக்கு வாறுகாலே தேவையில்லை.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி